ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 6. ஏப்ரல், 1943 நெ. 1

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வெய்யன்ன, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்.—

ஆறாவது ஆண்டு ... 1

இந்திய கிராம அரசியல், பொருளாதார வாழ்க்கையை உயிர்ப்பிக்கவேண்டும் ... ... 1

சென்னை கிராம பஞ்சாயத்து மசோதா—கவர்மெண்டின் இரண்டாவது அறிக்கை ... 4

2. ராம தீபம் ... ... ... 5

3. அதிக ஆகார உற்பத்தி இயக்கத்தின் பலன்கள் ... 6

4. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 7

5. சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் வருஷாந்திர அறிக்கை ... ... 9





கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

The Village Panchayat Journal.

VOL. VI] APRIL, 1943. [No. 1.

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

## In the Sixth Year.

From this issue we are in the Sixth year of our existence. It is a matter for congratulation that we have been able to keep our head above water and go forward in this season of scarcity and war. As we have so often said, the credit must go to the support of a number of Panchayats that have always been mindful of the well being of all. Harder times seem to be ahead. Want of paper may force us sometimes to issue two numbers together *i.e.*, it is quite possible that in the near future, it may become necessary to improvise a year of eight months instead of twelve.

Under contingencies like that we hope our subscribers will remain not only loyal but more zealous in canvassing support from sister Panchayats so that whenever convenience should present itself we may be in a position to utilise it and face the situation with full financial backing. The more the panchayats are regular in sending us subscriptions the greater, necessarily, will be our efficiency to serve them. We hope hundreds of more Panchayats would join us to strengthen a movement which is their own and of usefulness to themselves.

## Revive the Administrative and Economic Life of the Village.

Sir Malcolm Darling, a former Financial Commissioner of Punjab, spoke recently in London. He said that democracy in India could not succeed without a vigorous system of village self-Government. He said that this should be encouraged in two ways—by the revival of the old village Panchayat and by the development of the Co-operative movement. May we underline the phrase "Vigorous system". This necessarily implies universal establishment of these institutions and a backing of resources behind them to carry on their functions

to make democracy a reality in the village --in fact in every village. In this short note, we do not desire to discuss details but we should very much desire to draw the attention of our Governments to the full implications of a suggestion made by such a high authority as Sir Malcolm who knew Indian life very intimately while he was in India. Democracy for India cannot be true and complete until it is established for every village in this land. India is a land of villages. Its population is mainly dependent on agricultural economy. The usurer middleman has invaded our villages. He has ruined the ryots' life. The poison of indebtedness has so permeated life that helplessness and hopelessness are writ large on the face of the ryot. It is the Hercules of co-operation working, not by the credit line alone, but by the full circumference of the villager's economic life that must bring cheer. We must acknowledge that, of late, the co. operative effort has been moving in an all embracing manner. More drive, more propaganda, and more thorough Debt Redemption efforts are still necessary. A planned scheme for the covering of the whole area of the country with Co-operative societies has yet to come. The present Government's drive that has been launched for co-operative stores should be utilised to make the stores movement universal. The war has demonstrated to what lengths private profiteers can go. If the moral of the situation can be brought home to the people by properly directed propaganda Co-operative economy will have made rapid progress against the earlier form of extortionist economy. Official and non official propagandist work has now to be turned out on an immense scale. This is the time for the other and more fundamental requisite for democracy to be worked up. Ignorance is a greater burden than debt. This is what is implied in the objection raised by men who state that a population with ten per cent. literacy may not make material for democracy. It is true that such a population is not in a fit condition for leading a decent life, let alone a life of democracy. It is not in a fit condition to make any endeavour a success in the modern world. If the mass of men were literate and could read the ten laws of Co-operation for themselves that movement would not be where it is to-day in this country. Therefore, may we not urge that the Co-operative departments—official and non-official—should include removal of illiteracy as an essential item in their programmes. Democratisation of Finance or politics cannot have its true development without democratisation of knowledge, and the first step towards it, in the modern world, is literacy.

Matters are not so simple when we turn to Panchayats, the vigorous reorganisation of which, Sir Malcolm Darling advocates. It is true that in our province we have today about 7,000 Panchayats in number only in name. Actually, efficient panchayat may be only a half. It is equally true that in certain areas like the Mysore state

highly ameliorative work has been turned out by the Panchayats under the fostering care of a personal Government. Panchayat laws exist in other provinces as well. The Panchayat movement, however, has not had enough encouragement in India as a whole. The first Panchayat Law was ours in the Madras Presidency. It was Act XV of 1920, an enabling Act with very great elasticity allowed. Its absorption into the local Boards Act in 1930 brought on complications from which we are not yet free. A new act is promised about which we have already said enough. In the province of its origin, the Panchayat movement has not achieved enough tangible result within these twenty years and more. In other areas the position is not much better. Non-official organisations do not yet exist in enough numbers take to care of the movement. The Madras Provincial Union of Panchayat Boards is probably the only one of its kind. An all India organisation is quite an essential. It is equally necessary that in the Government of India also there should be somebody to take care of the Panchayat life of India as a whole and develop it. The Panchayats must be enabled to join into larger and larger groups for pooling of common experiences and carrying out of common policies so that every Panchayat in the country may fall into line with the Indian democratic state. In fact, as per Sir Malcolm Darling, co-operation and the village Panchayat are the two facets of the village democratic polity. Therefore, it is time that the Panchayat life of the country is recognised as an integral part of our national life in as universal a manner as co-operation is recognised today and similar organisations developed. We do hope that the co-operators all over India, the Governments, and others concerned will give our suggestion the consideration it deserves and help to make the Panchayat movement a universal movement for the country ultimately forming the bedrock of Indian Democracy on its administrative side.

---

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 6 | ஏப்ரல், 1943 | No. 1 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப் தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்

## தலையங்கம்.

### ஆறுவது ஆண்டு.

இந்த இதழுடன் நமக்கு ஆறுவது ஆண்டு ஆரம்பமாகிறது. இந்த யுத்த சமயத்திலும், பஞ்ச காலத்திலும், நாம் நம் பத்திரிகையை சமாளித்து நடத்தி வருவது விசேஷமே. இதற்கு நம்மை பொதுமக்களின் நன்மையை உத்தேசித்து ஊக்கத்துடன் ஆதரித்து வரும் அநேக பஞ்சாயத்துக்களை போற்ற வேண்டும். வருங்காலம் இன்னும் கஷ்டமானதாக இருக்கும் போல் தோன்றுகிறது. காகித பஞ்சத்தினால் நாம் சில சமயம் இரண்டு இதழ்களை ஒன்றாக சேர்த்து வெளியிட நேரிடும். மேலும் சமீபத்தில், வருஷத்திற்கு 12 மாதங்களுக்கு பதில் 8 மாதங்கள் வைத்து சமாளிக்க வேண்டி வரலாம். அப்படி ஏதாவது ஏற்பட்டால், நம் சந்தாதார்கள் நமக்கு விடாமல் ஆதரவளிப்பதுடன், இதர பஞ்சாயத்துகளின் ஆதரவையும் நமக்குத் தேடித்தர இன்னும் ஊக்கம் கொள்வார்கள் என்றும், அதனால் தகுதியான சந்தர்ப்பங்கள் ஏற்படும்போதெல்லாம் நாம் அதை உபயோகப்படுத்திக்கொள்ளவும், பூரண திரவிய சகாயத்தையடையவும் சாத்தியமாகும் என்று நம்புகிறோம். எவ்வளவுக்கெவ்வளவு சந்தா தொகை தவறாமல் அனுப்பப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நம் சேவையும் மேம்பட்டதாக இருக்கும். ஆகையால் இன்னும் நூற்றுக்கணக்கான பஞ்சாயத்துகள் நம்முடன் சேர்ந்து நம் சங்கத்தை பலப்படுத்தி பொது மக்களும் தாங்களும் நன்மையடைவார்கள் என்று நம்புகிறோம்.

அநேகமாய் மே, ஜூன் மாத இதழ்கள் ஒன்றாக வெளியிடப்படலாம். சந்தாதார்கள் இதை பொருட்படுத்தமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

### இந்திய கிராம அரசியல், பொருளாதார வாழ்க்கையை உயிர்பிக்க வேண்டும்.

மாஜி பஞ்சாப் கமிஷனராக இருந்த சர். மால்கம் டார்லிங் என்பவர் சமீபத்தில் லண்டனில் பேசியபோது, சுறு சுறுப்பாக வேலை செய்யும்

கிராம சுயாட்சி ஏற்பாடில்லாமல் இந்தியாவில் ஜனநாயகம் திருப்திகரமாக வேலை செய்யாது என்று சொல்லி, இதை விருத்திசெய்ய, பழையபடி கிராம பஞ்சாயத்து கோவாபரேடிவ் ஸ்தாபனம், இவை ஏற்பட்டால்தான் முடியும் என்று சொன்னார். அவர் சுறு சுறுப்பாக வேலை செய்யும், என்று சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது. அதாவது அவை எங்கும் ஏற்பட்டு, ஜனநாயகத்தை கிராமங்களில் உண்மையாக ஸ்தாபிக்கவேண்டுமானால் அவைகளுக்கு தேவையான சக்தியளிக்கவேண்டும். இந்த சிறிய கட்டுரையில் நாம் அந்த விவரங்களை யெல்லாம் ஆராய விரும்பவில்லை. ஆனால் இந்தியாவில் உத்தியோகம் பார்த்த காலத்தில் இந்திய கிராம வாழ்க்கையை நன்கு அறிந்து, அனுபவத்துடன் சொல்லும் சர் மால்கம் டார்லிங் போன்ற ஒருவருடைய அபிப்பிராயங்களை நம் கவர்மெண்டார்கள் தகுந்தபடி கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இந்த தேசத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால்தான் தேசத்தில் அதை ஏற்படுத்தமுடியும். இந்தியா கிராமங்களடங்கியது. அதன் ஜனங்கள் விவசாயத்தினால்தான் ஜீவிக்கிறார்கள். அநியாய வட்டிக்குக் கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரர்கள் கிராமங்களில் புகுந்து, குடிகளை நாசமாக்கி அவர்கள் நிலைமையை மிகவும் மோசமாக்கிவிட்டார்கள்.

கடன் கொடுக்கும் கோவாபரேடிவ் ஸ்தாபனம் மட்டுமல்லாமல் மற்ற எல்லா கிராம பொருளாதார சம்பந்தமான வாழ்க்கையம்சங்களிலும் பலத்த கோவாபரேடிவ் ஸ்தாபன முயற்சியால்தான் கிராம வாசிக்கு விமோசனமுண்டு. இந்த சந்தர்ப்பத்தில் கோவாபரேடிவ் ஸ்தாபனம் எல்லா அம்சங்களிலும் சமீப காலத்தில் முன்னேற்றமடைந்து வருவதை நாம் குறிப்பிட வேண்டும். இன்னும் முயற்சி, பிரசாரம், கடன் நிவாரண ஏற்பாடுகள் தேவை. தேசத்தின் எல்லா பாகங்களுக்கும் பரவி வேலை செய்யக்கூடிய திட்டம் இன்னும் தயாராகவில்லை. தற்சமயம் கவர்மெண்டு கோவாபரேடிவ் ஸ்டோர்களை பலப்படுத்துவது நிரந்தரமாக இன்னும் பூரணமாக செய்ய வேண்டும். தனிப்பட்டவர்கள் எவ்வளவுதூரம் கொள்ளை லாபம் அடிக்க அஞ்சமாட்டார்கள் என்பது இந்த யுத்தத்தினால் வெளியாகிவிட்டது. இந்தப்படிப்பினையை சரியாக பயன்படும்படி கவர்மெண்டு பிரசாரம் செய்தால், கோவாபரேடிவ் இயக்கம் துரிதமாக முன்னேற்றமடையும். இப்போது உத்தியோக—உத்தியோகப்பற்றற்றவர்களின் பலத்த பிரசாரம் மிகவும் அவசியம். ஜனநாயகத்திற்கு இன்றியமையாததான தேவையை—அ.து. கல்வி—தேடிக்கொள்ள இதுதான் தக்க சமயம். கடன் சுமையை விட கல்வியில்லாமை பெரிய பளுவு. ஜனநாயகத்திற்கு ஜனத்தொகையில் 10 சத விகிதமே படித்தவர்கள் இருந்தால் தடை என்று அதனால் ஆக்ஷேபிக்கப்படுகிறது. அதனால் ஜனங்கள் திருப்திகரமான வாழ்க்கை நடத்த முடிவதில்லை என்பது உண்மைதான். பின் ஜனநாயகம் எப்படி சாத்தியப்படும்.

கல்வியில்லாமையால் உலகத்தில் தற்சமயம் ஒரு காரியத்திலும் வெற்றிகிடைக்காது. கோவாபரேடிவ் ஸ்தாபனங்களின் முக்கியமான

பத்து விதிகளை வாசித்து அதன்படி நடக்க ஜனங்களுக்குத் தெரிந்துவிட்டால், நம் தேசத்தில் அவர்களின் நிலைமை தற்போதுபோல் பின்னடைந்திருக்காது. ஆகையால் நாம் உத்தியோகஸ்தர், உத்தியோகஸ்தர் அல்லாதவர்கள் உள்பட, கோவாபரேடிவ் இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் கல்வியில்லாமை நீக்குவது முக்கியமாகச் செய்யவேண்டிய கடமை யென்று கருதி முயற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். உண்மையான ஜனநாயகம் அரசியல், பொருளாதார ஜனநாயகத்தினால் ஏற்படாது. அறிவு ஜனநாயகத்தால்தான் ஏற்படும். அதற்கு முதல் அஸ்திவாரம் எழுத்தறிவு.

பஞ்சாயத்துகளை நோக்குமிடத்து—அவைகளைத்தான் சர். மால்கம் டார்லிங் என்பவர் சுறு சுறுப்பாக நடத்தவேண்டுமென்கிறார்—நிலைமை அவ்வளவு சீராக இல்லை. நம் மாகாணத்தில் பேருக்கு 7000 பஞ்சாயத்துகள் இருப்பது வாஸ்தவம்தான். ஆனால் அவைகளில் பாதிதான் திருப்திகரமாக வேலை செய்கின்றன ஆனால் மைசூர் சமஸ்தானம் போன்ற சில பிரதேசங்களில், அந்த கவர்மெண்டுகளுடைய அனுசரணையான மேற்பார்வையில் பஞ்சாயத்துகள் பல நன்மை தரும் வேலைகளை செய்திருப்பதும் உண்மைதான். இதர மாகாணங்களிலும் பஞ்சாயத்து சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் மொத்தத்தில் இந்தியாவில் பஞ்சாயத்து இயக்கத்திற்கு போதுமான ஆதரவு கிடையாது. 1920 வருஷம் பஞ்சாயத்து சட்டம் நம் மாகாணத்தில்தான் முதல் முதலில் ஏற்பட்டது. அது வளர்ச்சிக்கு அதிக இடம் கொடுத்தது. 1930 வருஷம் ஸ்தல ஸ்தாபன சட்டங்களுடன் அதை இணைத்த பின் சிக்கல்கள் ஏற்பட்டன. அவை இன்னும் தீர்ந்தபாடில்லை. ஒரு புதிய சட்டம் வரப்போவதாக தெரிவிக்கப்பட்டது. அதைக் குறித்து நாம் ஏற்கனவே எழுதியிருக்கிறோம். அது இன்னும் வந்தபாடில்லை. இந்த 20 வருஷங்களுக்கு மேலாக, அதன் பிறப்பிடமாகிய இந்த மாகாணத்தில் பஞ்சாயத்து இயக்கம் திருப்திகாமாக விருத்தியடையவில்லை. மற்ற பிரதேசங்களிலும் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. இந்த இயக்கம் சரிவர பாதுகாக்க உத்தியோகப்பற்றல்லாத ஸ்தாபனங்கள் இன்னும் ஏற்படவில்லை. சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் சங்கம் ஒன்றுதான் இப்போது இந்த வேலையை கவனித்து வருகிறது. இந்தியா முழுவதிற்கும் ஒரு ஸ்தாபனம் மிகவும் அவசியம். மேலும் இந்தியா கவர்மெண்டிலும், இந்திய பஞ்சாயத்து விஷயங்களைக் கவனித்து, விருத்தி செய்ய ஒருவர் இருக்கவேண்டியது அவசியம்.

எல்லா பஞ்சாயத்துகளும் ஒன்று சேர்ந்து தங்கள் அனுபவங்களையும், சாதித்தவைகளையும் ஒன்றுகூட்டி பயனடையும்படி செய்யவேண்டும். அப்போது இந்திய ஜனநாயக ஏற்பாட்டில் பஞ்சாயத்துகள் நன்மையுடன் கலந்துக்கொள்ளமுடியும் உண்மையில், சர் மால்கம் டார்லிங் சொல்லியிருப்பதுபோல், கோவாபரேடிவ் இயக்கமும், பஞ்சாயத்தும் இந்திய ஜனநாயக ஆட்சி ஏற்படுவதற்கு இரண்டு தூண்கள் போல் இருக்கும். ஆகையால் கோவாபரேடிவ் இயக்கம் போல் பஞ்சாயத்துகளும் நம் தேசிய ஆட்சிக்கு இன்றியமையாதது என்பதையறிந்து அந்த மாதிரி ஸ்தாபனங்களை ஆதரிப்பது அவசியம். தேசத்தில் கோவாபரேடிவ் இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள், கவர்மெண்டுகள், மற்ற அக்கரைகொண்டவர்கள் எல்லோரும் எங்கள் யோசனையை கவனித்து, தேசம் முழுவதும் பஞ்சாயத்து இயக்கத்தைப் பரவும்படி செய்து, அதன் மூலம் வரப்போகும் இந்திய ஜனநாயக ஆட்சிக்கு இதை அடிப்படையாக இருக்கும்படி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

## சென்னை கிராம பஞ்சாயத்து மசோதா—கவர்மெண்டின் இரண்டாவது அறிக்கை :—

சென்னை கவர்மெண்டின் இரண்டாவது அறிக்கையை படித்து ஆச்சரியமடைந்தோம். முதல் அறிக்கையில், கவர்மெண்டார் கலெக்டர்களின் இதர அலுவல்களைக் குறைத்தாவது பஞ்சாயத்துகளை அவர்களிடம் ஒப்படைக்கப்போவதாக கண்டிருந்தது. இது ஒரு மாதம்தான் ஆகிறது. ஆனால் இந்த இரண்டாவது அறிக்கையில் கலெக்டர்களுக்கும், டிபுடி கலெக்டர்களுக்கும் வேலை அதிகமென்ற காரணத்தினால், சட்டத்தை ஒத்திப்போட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 5000 ரூபாய்க்குமேல் வருஷம் வருமானமுள்ள பஞ்சாயத்துகளுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்போவதாக தெரிகிறது. ஏனென்றால் அதற்கு தேர்ச்சியடைந்தவர்கள் இருக்கிறார்களாம். இதனால் மசோதாவினால் கிடைக்கக்கூடிய லாபங்கள் இல்லாமல், 10 சத விகித செலவு உத்தியோகஸ்தர் சம்பளத்திற்காக பஞ்சாயத்துகளுக்கு ஏற்படும். மேலும் சில பஞ்சாயத்துகள் தங்கள் ஐவேஜைக்கொண்டு முக்கியமான வேலைகளை நடத்தவும் போறாமல் கஷ்டமடையலாம். 11-4-43 தேதியில் மாகாண பஞ்சாயத்து போர்டு சங்கத்தில் நிரைவேறிய தீர்மானப்படி, இந்த மசோதா சட்டமாகி, அமுலுக்கு வந்தாலும், மசோதா கமிட்டி சிபார்சு செய்ததுபோல், கவர்மெண்டிடமிருந்து திரவிய சகாயம் தேவையாக இருக்கும்.

இப்போது அது இன்னும் அவசியமாகும். சங்கத்தின் இன்னொரு தீர்மானத்தைப்பற்றியும் கவர்மெண்டார் தயவுசெய்து கவனிக்கவேண்டும், அ.து. பஞ்சாயத்துகளுக்கு ஒரு பிரத்தியேக ரிஜிஸ்ட்ரார்-ஜெனரல் நியமிக்கப்படவேண்டும். முதல் அறிக்கையில் கவர்மெண்டார் இந்த உத்தியோகஸ்தரை நியமிப்பதுபற்றி ஒப்புக்கொண்டார்கள். கலெக்டர்களுக்கு அதிக வேலையிருப்பதால் இந்த முக்கியமான திருத்தத்தை ஏன் செய்யக்கூடாது என்பது விளங்கவில்லை. கலெக்டர்களுக்கு சௌகர்யப்படும்வரையில் ஒரு பிரத்தியேக ரிஜிஸ்ட்ராரை, தற்சமயம் இருக்கும் பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்களுடன், நியமிக்கலாம். அவர்கள் நன்மை தரும் வேலைகளை செய்ய இடமிருக்கிறது. இப்போது இருக்கும் ஏற்பாட்டால் சில்லரை பஞ்சாயத்துகள் அப்படி அப்படியே இருக்கும். இப்போதிருக்கும் சட்டத்தின்படிகூட, சில பொது நல காரியங்களுக்காக அ. து. ஓவர்சியர், ஹெல்த் ஆபீசர், நியமிப்பது முதலியவைகளுக்கு கூட்டு கமிடிகள் ஏற்படுத்த கவர்மெண்டு முன் வந்தால், கவர்மெண்டு மிகவும் நன்மையை செய்தவர்களாவார்கள்.

நிர்வாக உத்தியோகஸ்தர் இருக்கும் பஞ்சாயத்துகள்கூட, தங்கள் நிதியிலிருந்து சில முக்கியமான வேலைகளை கவனிக்கமுடியாவிட்டால், சுற்றியுள்ள பஞ்சாயத்துகளுடன் சேர்ந்து தங்கள் நிலைமையை சீர்படுத்திக்கொள்ளலாம். தனிப்பட்ட பஞ்சாயத்துகள், தெரு பெருக்குவது, அசுத்தங்களை அப்புறப்படுத்துவது போன்ற மிக முக்கியமான வேலைகளை நடத்தவும் சில சமயம் சக்தியற்று ஆள்பலம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றன. ஒன்றாக சேர்ந்தால், தங்கள் ஒற்றுமையான பலத்துடன் பயன்பட வேலை செய்யமுடியும். அவைகளுக்கு அந்த அதிகாரம் கொடுக்காமல் இன்னும் தடுப்பதா ?

———

# ராம தீபம்.

ராம தீபம் மர எண்ணை அல்லது கிரசின் எண்ணையால் எரியக்கூடிய ஒரு புது வகை விளக்கு. அதை செய்வதும், ஏற்றுவதும் சுலபம். 'இது வரையில் உபயோகப்பட்டு வந்த மர எண்ணை விளக்குகளுக்கு எண்ணை கொள்ளும் அடுக்கு ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு இருக்கும். அதிலிருந்து திரிக்கு எண்ணை எட்ட ஒரு குழாய் உண்டு. இது கிரசின் எண்ணை ஊற்ற லாயக்கற்றது.

ராம தீபத்தில் இரண்டுவகை எண்ணையும் உபயோகப் படுத்தலா மாகையால் அதை வாங்குவதால், பின்னிட்டு கிரசின் எண்ணை தாராளமாக கிடைத்தாலும், நஷ்டமொன்றும் ஏற்படாது. மேஜை விளக்கு, ஹரிகேன் விளக்கு, ரயில் பிளாட் பாரம் விளக்கு, படுக்கையறை விளக்கு, சிம்னி இல்லாத விளக்கு—இப்படி பல வகையாக உபயோகிக்கலாம்.

ராம தீபத்தில் சில வகைகள் ஏழை மக்கள் வாங்க முடியாதபடி அதிக விலையாக இருப்பதால், சென்னை யுத்த முன்னணி சங்கத்தார், கிழக்கு கோதாவரி ஜில்லா, தவளேச்வரத்திலிருக்கும் ராம தீப உற்பத்தி சாலைக்காரர்களுடன் ஏற்பாடுசெய்து, படுக்கையறை தூக்கியோகும் விளக்கு, படுக்கை விளக்கு, சிம்னி இல்லாத புட்டி விளக்கு, இந்த மூன்று வகையான சரசமான விளக்குகளை அதிகமாக தயார் செய்யும்படி தெரிவித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு விளக்கிலும் 'சென்னை யுத்த முன்னணி', என்று முத்திரை இருக்கும். தற்சமயம், படுக்கையறை ராந்தல் ஒரு ரூபாயாகவும், படுக்கையறை விளக்கு 9 அணாவாகவும், புட்டி விளக்கு 2 அணாவாகவும் சில்லரையில் விலை தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சரசமான விளக்கு ஏற்பட்டால் மாத்திரம் கிராம வாசியின் கஷ்டம் தீராது. எண்ணை அசப்படுவதும், அதன் விலையும் கவனிக்கவேண்டும். இதனால் பலவித எண்ணைகள் உபயோகித்து பரிக்ஷைசெய்து பார்க்கப்பட்டது. படுக்கையறை ராந்தலும், படுக்கையறை விளக்கும் மூன்று அவுன்ஸ் எண்ணை கொள்ளும். அடியில் ஒவ்வொரு எண்ணையும் எவ்வளவு நேரம் எரிகிறது என்பது குறிப்பிக்கப்பட்டிருக்கிறது.

3 அவுன்ஸ் கடலை எண்ணை 21 மணி எரிகிறது
,, ,, புங்க எண்ணை 20 ,,
,, ,, வேப்பெண்ணை 24 ,,
,, ,, இலுப்பெண்ணை 20 ,,
,, ,, புகையிலை எண்ணை 21 ,,
,, ,, கடுகெண்ணை, ¼ பாகம் கடலை எண்ணையுடன் கலந்து 25 மணி எரிகிறது.

இலுப்பெண்ணையை குளிர் காலத்தில், அது உறைந்து போவதால், உபயோகப்படுத்த முடியாது.

எல்லாவற்றையும் விட வேப்பெண்ணை அதிக நேரம் எரிகிறது. அது ஒரு வீசை ஒரு ரூபாயாக வைத்துக்கொண்டால், தினம் 3, 4, மணி எரிவதாக வைத்துக்கொண்டால், ஒரு வாரத்திற்கு 1 அணா, அ. து. ஒரு மாதத்திற்கு 4 அணா செலவாகும்.

மேற்படி எல்லா எண்ணைகளிலும், ராம தீபம் நன்றாக 8 மணி சாவகாசம் எரியும். கடைசி சொட்டு எண்ணை தீர்ந்தபின் தான் விளக்கு அணையும்.

எல்லா ஜனங்களும் தங்கள் விளக்குகளுக்கு ஷை எண்ணைகளையே (தங்கள் பிரதேசத்தில் கிடைப்பவைகளை) உபயோகித்து, கிரசின் எண்ணை முக்கியமான காரியங்களுக்கு மிச்சப் படுத்துவார்கள் என்று நம்புகிறோம். இதனால் உள் நாட்டு சரக்குக்கு கிராக்கி ஏற்பட்டு ஜனங்களுக்கு நன்மை ஏற்படும்.

# அதிக ஆகார உற்பத்தி இயக்கத்தின் பலன்கள்.

இந்தியா கவர்மெண்டு அங்கத்தினர், கனம் சர்தார் சர் ஜோகேந்திர சிங், அதிக ஆகார உற்பத்தி இயக்கமானது பயிர் செய்யப்பட்ட விஸ்தீரணத்தில் தன் லக்ஷியத்தை (அரிசி, தினைகள் குறித்து) வெற்றிகரமாக அடைந்து விட்டதாக சொன்னார். இன்னும் தீவிரமாக இயக்கம் நடத்த மாகாணங்களுக்கு தேவை யானால் திரவிய சகாயம் செய்ய இந்தியா கவர்மெண்டு முன் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

பருத்தி பயிர் செய்யப்பட்டு வந்த பூமி சென்ற டிசம்பர் கணக்குபடி 40 லக்ஷம் ஏகரா குறைவு பட்டிருப்பதாகவும், அவைகளை ஆகார பயிர் செய்யும்படி மாற்ற திரவிய சகாயம் செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.

ஆகார உற்பத்தி மாகாண கவர்மெண்டைச் சேர்ந்த தென்றும், விலைகட்டு பாடு, தான்யங்கள் போக்கு வரத்து ஆகார, வர்த்தக இலாகாவைச் சேர்ந்த தென்றும், தன் இலாகா உற்பத்தி அதிகமாக்கும் முயற்சியை அதிகப்படுத்துவது பற்றி வேலை செய்து வருகிறதென்றும் தெரிவித்தார்.

தக்ஷிணத்தில் ஒன்று இரண்டு பிரதேசங்களில் மழையில்லாமை காரணத்தி னால் எதிர் பார்த்த பலன் கிடைக்கவில்லையே தவிற மற்ற பிரதேசங்களில் எல்லா ரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பினாலும், ஆதரவினாலும், இந்த இயக்கம் மொத்தத்தில் மிகவும் திருப்திகரமாக நடந்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் அவர் சொன்னதாவது :—ஜாக்கிரதையாக திட்டம் போட்டு திறமையுடன் நடத் தினால் தான் இயக்கம் எல்லா விஷயங்களிலும் பலன் தரும் என்று நாங்கள் போன வருஷ அனுபவத்தினால் தெரிந்து கொண்டோம். வரப்போகும் பருவ காலங் களுக்கு எல்லா அம்சங்களிலும் அதிகப்படி பலன் தருவதற்காக மாகாண கவர் மெண்டுகளை திட்டங்கள் தயார் செய்து அனுப்பும்படி கேட்டிருக்கிறோம். உற் பத்தி லக்ஷயம் இவ்வளவாக இருக்கவேண்டும் என்றும் அவர்களுக்கு திட்டம் தயாரிப்பதில் தெரிவித்திருக்கிறோம்.

மாகாண கவர்மெண்டுகள் இதனால் ஏற்படும் அதிக செலவை தாங்களே சமாளிக்க முயலும் என்று நம்புகிறோம். ஆனால் இந்த இயக்கத்தின் அடிப்படை யான லக்ஷியத்தை நிறை வேற்றக் கூடிய எந்த திட்டமானாலும், தற்சமயம் அதன் முக்கியத்தை உத்தேசித்து, மாகாண கவர்மெண்டுக்கு அதை ஏற்றுக்கொள்ள சக்தியோ, சம்மதமோ இல்லை யென்ற காரணத்தினால் தடைபடக் கூடாது என்பது இந்தியா கவர்மெண்டின் அபிப்பிராயம். இதர பல முக்கியமான விஷ யங்களைக்குறித்து இந்தியா கவர்மெண்டு கவனம் செலுத்த வேண்டியிருந்தாலும், இது தீர்மானிக்கப் பட்டது.

எங்கெங்கு அவசியமோ, அங்கு இந்தியா கவர்மெண்டார் சகாயம் செய் வார்கள். அதாவது (1) பயிர் செய்பவர்களுக்கு மேன்மையான விதைகள், எருவு

முதலிய கொடுக்க தக்காவி கடன்கள் கொடுக்க மாகாண கவர்மெண்டுக்கு தற்காலிக கடனும், (2) எதாவது திட்டத்தின் செலவு தொகையில் ஒரு பாகத்தை எந்திக் கொள்ள, மான்யங்களும் தேவையாக இருக்கலாம்.

மாகாண கவர்மெண்டுகளை இந்தியா கவர்மெண்டுக்கு குறிப்பான திட்டங்கள் அனுப்பும்படி கேட்டிருக்கிறோம்.

மனித சக்திக்கு முடியுமானவரையில் அடுத்த பருவ காலத்தில் சகல ஜனங் களுக்கும் ஆகார பொருள்கள் தாராளமாக கிடைக்கவேண்டி எல்லாவித முயற்சி யும் செய்கிறோம் என்று திடமாக உறுதி கூறுகிறேன்.

---

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

---

**இந்தியாவில் கிராம சுயாட்சி—சர் மால்கம் டார்லிங்கின் வேண்டுகோள்—** (Hindu 3—4—1943.)

மாஜி பஞ்சாப் பொக்கிஷ கமிஷனர் சர் மால்கம் டார்லிங் ராயல் சொஸைடி யில் திறமையாக வேலை செய்யும் கிராம சுயாட்சி ஏற்பாடில்லாமல் இந்தியாவில் ஜனநாயகம் வெற்றி பெறாது என்று சொன்னார். பழைய பஞ்சாயத்துகளை சீர் படுத்தியும், கோவாபரேடிவ் இயக்கத்தைப் பலப்படுத்தியும்தான் இது சாத்தியப் படும் என்று சொன்னார். 10 சத விகிதமே எழுத்தறிவுள்ளவர்கள் இருக்கும்போது ஜனநாயகம் இந்தியாவில் வளராது என்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள், ஆனால் இந்தியா ஜனநாயக வழியில் துணிந்து புகுந்து விட்டது. தற்சமயம் செய்யவேண்டியது என்னவென்றால் அந்த ஜனநாயகத்தால் இந்திய கிராமங்களுக் கும், அதன் 35 கோடி மக்களுக்கும் ஆபத்தில்லாமல் செய்யவேண்டியதுதான் கடமை என்று சொன்னார்.

* * *

**மக்காச் சோளமாவு.**

சொர்கம் தான்யத்திலிருந்து வருஷம் 36,000 பவுண்டு ஆகார மாவு செய்ய ஒரு யந்திர சாலை கோயம்பத்தூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மாவு சாரை எடுக்க ஒரு சாதகமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு லேசான வர்ண முடைய திராவகம். அதை வான்மீன் எண்ணெயுடன் கலந்தால், விடாமின் சத்து நிரம்பியுள்ள பானம் கிடைக்கிறது. அதை வர்த்தக துறையில் தயார் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

* * *

**மாங்கொட்டை பருப்பு ஆகாரம்.**

கஞ்சம் ஏஜென்ஸியில் கோண்டு மலைப் பிரதேசத்திலுள்ளவர்கள் மாங்கொட்டை பருப்பை சாதாரணமாக ஆகாரமாக உபயோகிக்கிறார்கள். மாம்பழ காலத்தில் எல்லா மாங்கொட்டையையும் சேகரித்து, ஆகஸ்டு மாத கடைசியில் அவைகளை உடைத்து, பருப்பை எடுத்து மறுநாள் காலை வரையில் தண்ணீரில் ஊறவேண்டும். அவைகளை நன்றாக பொடிசெய்ய வேண்டும். ஈரமான பொடி ஒரு மூங்கில் கூடை

யில் போட்டு தட்டையாக செய்யவேண்டும். அதில் ஒரு குச்சியினால் அநேக ஆழமான தொண்டிகள் செய்து அந்த கூடையை மறு நாள் காலே வரையில் ஒரு உஷ்ணமான இடத்தில் வைக்கவேண்டும்.

அப்புறம் அது ஒரு ஓடும் ஜலத்தில் கழுவப்படுகிறது. அந்த பொடி கசக்காமல் மாறும் வரையில் கழுவப்படுகிறது. பிறகு இந்த பொடியை உலர்த்தி தின்னலாம். இதை பல விதமாக செய்து புசிக்கிறார்கள். இதன் சத்தை பரிசோதிக்க கூனூர் ஆராய்ச்சி சாலையிலிருக்கும் டாக்டர் அக்ரூயிடிற்கு அனுப்பப்பட்டது. அதிலிருந்து இதில் அரிசியைப்போல் சில ஆகார சத்துக்கள் இருப்பதாக ஏற்படுகிறது. அதில் விஷவஸ்து ஒன்றும் இல்லே. ஜனங்கள் அரிசியுடன் இந்த உணவையும் உபயோகிக்கலாம்.

* * *

மாம்சத்திற்கு சில கால் நடைகளே கொல்லுவதற்கு தடை.

தேசத்தின் கால் நடை வளர்ச்சியை பாதிக்குமாதலால், 10 வயதிற்குட்பட்ட வேலே செய்யும் எருதுகளேயும், பால் கொடுக்கும் பசுக்களேயும், சினேயாக இருக்கும் பசுக்களேயும் கொல்லுவது கூடாது என்று இந்தியா கவர்மெண்டார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். பட்டாளத்திலிருப்பவர்களுக்கு மாம்சம் சப்ளே செய்யும் கண்டிராக்டர்களுக்கு இந்த நிபந்தனேகள் விதிக்கப்படுகின்றன.

* * *

சர்க்கா.

கிராமங்களில் நூல் நூற்பதை விருத்தி செய்வதற்காக ஈஜிப்டு தேச கவர்மெண்டார் இந்தியா கவர்மெண்டை கேட்டதின்பேரில் மாதிரி நூல் நூற்கும் சர்க்கா ஒன்று ஈஜிப்டுக்கு அனுப்பப்பட்டது. அது அவ்விடம் சேர்ந்து, அது மாதிரி ஒன்று தயார் செய்துக்கொள்ளப்பட்டது. அதில் சிற்சில மாறுதல்கள் செய்து, பல சர்க்காக்கள் செய்யப்பட்டு கிராம ஜனங்களுக்கு விநியோகிக்கப்படும்.

---

## சென்னே மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் 11—4—1943ல் நடந்த நிர்வாக கமிட்டி கூட்டத்தின் நடவடிக்கைகள்.

---

### தீர்மானம்.

உத்தேசிக்கப்படும் சட்டம் எவ்வளவு திருப்திகரமற்றதாக இருந்தாலும், அதை சட்டமாக்குவது அவசியம். ஆனல் முக்கியமான வேலேகளேச் செய்ய பஞ்சாயத்துகளுக்கு திரவிய சகாயமும், பஞ்சாயத்து நிர்வாகத்தை ஒரு பிரத்தியேக ரிஜிஸ்த்ராரிடமும் ஒப்படைக்க சட்டத்தில் மாறுதல்கள் செய்யவேண்டும்.

---

# சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டு களின் யூனியன்.

## 1943ஞ் மார்சு மாதம் 31-ம் தேதி முடிய பாலன்ஸ் ஷீட்.

---

### பொறுப்பு.

| | | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| சென்ற கணக்குபடி மகாநாடு மிச்சம் | ... | | | | 3,767 | 11 | 4 |
| சில்லரை கடன்கள் ஆடிட் கட்டணம் | ... | | | | 40 | 0 | 0 |
| அட்வான்ஸ் சந்தா | ... | | | | 6 | 0 | 0 |
| சஸ்பென்ஸ் கணக்கு | ... | | | | 8 | 6 | 0 |
| வரவு செலவு கணக்கு— | | | | | | | |
| கடைசி பாலன்ஸ் ஷீட்படி | ... | 626 | 0 | 2 | | | |
| வருவைவிட செலவு அதிகமானது | ... | 327 | 15 | 2 | | | |
| | | | | | 298 | 1 | 0 |
| மொத்தம் | ... | | | | 4,120 | 2 | 4 |

### இருப்பு

| | | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| மர சாமான்கள் கடைசி கணக்கு படி | ... | 320 | 0 | 0 | | | |
| கழிவு | ... | 32 | 0 | 0 | | | |
| | | | | | 288 | 0 | 0 |
| வசூல் செய்யக்கூடியதாக கருதப்படும் கடன்கள். | | | | | 1,301 | 0 | 0 |
| சி. சி. பி. யில் ஷேர் | ... | | | | 1 | 0 | 0 |
| கையிலிருக்கும் காகித இருப்பு | ... | | | | 740 | 0 | 0 |
| விளம்பர சார்ஜ் வரவேண்டியது | ... | | | | 60 | 0 | 0 |
| ரொக்கம் இதர இனங்கள் — | | | | | | | |
| கையில் | ... | 0 | 0 | 8 | | | |
| M. P. C. B. காண்டு கணக்கு | ... | 119 | 8 | 8 | | | |
| புருடென்ஷியல் | ... | 1,610 | 9 | 0 | | | |
| | | | | | 1,730 | 2 | 4 |
| மொத்தம் | | | | | 4,120 | 2 | 4 |

## சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்.

### 1943-ம் ஃடு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய வரவு செலவு கணக்கு.

| செலவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பத்திரிகை கணக்கு— | | | |
| சம்பளம் ... | 540 | 0 | 0 |
| காகிதம், அச்சு கூலி ... | 1,734 | 2 | 5 |
| தபால் .. | 503 | 2 | 3 |
| சிப்பந்திகள் ... | 394 | 0 | 0 |
| அங்கத்தினர்கள் பிரயாணபடி ... | 153 | 0 | 0 |
| வரியும், வாடகையும் ... | 250 | 0 | 0 |
| காகிதம், பேனா முதலியவை ... | 88 | 6 | 6 |
| சில்லரை இனங்கள் ... | 49 | 8 | 0 |
| டெலிபோன் ... | 144 | 8 | 3 |
| பத்திரிகை சந்தா ... | 6 | 0 | 0 |
| பாங்கி சார்ஜ் ... | 4 | 0 | 0 |
| 1942—1943 ஆடிட் பீஸ் ... | 40 | 0 | 0 |
| வசூலாகாத சந்தா (காரியதரிசி தெரிவித்தபடி). | 2,230 | 8 | 0 |
| மர சாமான்கள் கழிவு ... | 32 | 0 | 0 |
| மொத்தம் ... | 6,169 | 3 | 5 |

| வரவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சந்தா ... | 4,800 | 0 | 0 |
| விளம்பரம் முதலியவை ... | 183 | 0 | 0 |
| டிவிடெண்டு .. | 38 | 3 | 0 |
| வட்டி ... | 25 | 1 | 3 |
| சில்லரை வருமானம் ... | 55 | 0 | 0 |
| காகித கையிருப்பு ... | 740 | 0 | 0 |
| வரவை விட அதிகமான செலவு ... | 327 | 15 | 2 |
| மொத்தம் ... | 6,169 | 3 | 5 |

பரிசீலனை செய்து சரியென சொல்லப்பட்டது.

மதராஸ்
10 ஏப்ரல் 1943.

கர்ரா அண்டு கம்பனி,
கணக்கு பரிசோதகர்கள்.

## சென்னை மகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்.

1943-ம் வருஷம் மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய வந்தவையும் கொடுத்தவையும்.

| வரவு. | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்பத்தில் மிச்சம்— | | | | | | |
| கையில் ரொக்கம் ... | 159 | 6 | 6 | | | |
| திருவல்லிக்கேணி— | | | | | | |
| M. P. C. B. கரண்டு | | | | | | |
| கணக்கு ... | 49 | 9 | 0 | | | |
| ,, தலைமை ஆபீஸ். | 78 | 3 | 0 | | | |
| ,, ப்ருடென்ஷியல் | | | | | | |
| டிபாசிட் ... | 1,018 | 1 | 0 | 1,305 | 3 | 6 |
| பத்திரிகை சந்தா— | | | | | | |
| நடந்த வருஷம் ... | 3,489 | 0 | 0 | | | |
| பாக்கி ... | 587 | 0 | 0 | | | |
| தபால் செலவு வசூல் ... | 218 | 1 | 0 | | | |
| அட்வான்ஸ் சந்தா ... | 6 | 0 | 0 | 4,300 | 1 | 0 |
| விளம்பர வரவு ... | | | | 123 | 0 | 0 |
| டிவிடெண்டு ... | | | | 38 | 3 | 0 |
| ஜட்டி ... | | | | 25 | 1 | 3 |
| டெலிபோன் ... | | | | 19 | 6 | 9 |
| சில்லரை வரவு ... | | | | 55 | 0 | 0 |
| வசூல் செய்யப்பட்ட | | | | | | |
| அட்வான்ஸ் ... | | | | 8 | 6 | 0 |
| மொத்தம் ... | | | | 5,874 | 5 | 6 |

| செலவு | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| பத்திரிகை கணக்கு— | | | | | | |
| ஊதியம் ... | | | | 540 | 0 | 0 |
| காகிதம் ... | 1,076 | 7 | 5 | | | |
| அச்சு கூலி ... | 657 | 11 | 0 | 1,734 | 2 | 5 |
| தபால் ... | | | | 721 | 3 | 3 |
| சிப்பந்திகள் ... | | | | 394 | 0 | 0 |
| பிரயாணபடி ... | | | | 153 | 0 | 0 |
| வாடகை, வரி ... | | | | 250 | 0 | 0 |
| ஸ்டேஷனரி ... | | | | 88 | 6 | 6 |
| சில்லரை செலவு ... | | | | 49 | 8 | 0 |
| பத்திரிகைகளுக்கு ... | | | | 6 | 0 | 0 |
| சந்தா— | | | | | | |
| டெலிபோன் ... | | | | 163 | 15 | 0 |
| பாங்கி சார்ஜ் ... | | | | 4 | 0 | 0 |
| ஆடிட் பீஸ் (1942—1943) ... | | | | 40 | 0 | 0 |
| கடைசியில் இருப்பு— | | | | | | |
| கையில் ரொக்கம் ... | 0 | 0 | 8 | | | |
| M. P. C. B. திருவல்லிக்கேணி. | 119 | 8 | 8 | | | |
| ,, ப்ருடென்ஷியல்... | 1,610 | 9 | 0 | 1,730 | 2 | 4 |
| | | | | 5,874 | 5 | 6 |

மதராஸ்
10 ஏப்ரல் 1943.

பரிசீலனை செய்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

கர்ரா அண்டு கம்பனி,
கணக்கு பரிசோதகர்கள்.

## சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்.

### 1943—44ஆ பட்ஜெட்டு.

| வருமானம். | | ரூ. அ. பை. | செலவு. | | ரூ. அ. பை. |
|---|---|---|---|---|---|
| சந்தா | ... | 3,900 0 0 | ஊதியம் | ... | 500 0 0 |
| விளம்பரம் | ... | 400 0 0 | அச்சு காகிதம் | ... | 700 0 0 |
| வட்டி, டிவிடெண்டு முதலியன . | | 100 0 0 | அச்சு சார்ஜ் | ... | 750 0 0 |
| விளம்பர பாக்கி | ... | 60 0 0 | தபால் செலவு | ... | 400 0 0 |
| 43—44 சந்தா பாக்கி | ... | 800 0 0 | வி. பி. தபால் | ... | 300 0 0 |
| | | | சிப்பந்திகள் | ... | 400 0 0 |
| | | | வாடகை, வரி | ... | 360 0 0 |
| | | | டெலிபோன் | ... | 170 0 0 |
| | | | ஸ்டேஷனரி | ... | 120 0 0 |
| | | | சில்லரை செலவு | ... | 100 0 0 |
| | | | ஆடிடர் பீஸ் | ... | 60 0 0 |
| | | | மீடிங் பிரயாணபடி | ... | 400 0 0 |
| | | | பிரசாரம் | ... | 500 0 0 |
| | | | ஜில்லா மகாநாடு | ... | 500 0 0 |
| | | 5,260 0 0 | | | 5,260 0 0 |

# மதருஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனு பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

செக்ரடெரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியயன்னு, பி.ஏ., பி.எல்., 187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும் சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில் மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதறாஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.